செ.வெ.எண்:12/2017 நாள்:08.11.2017

**சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கே.புதுக்குளம் வருவாய் கிராமத்தில் 148 பயனாளிகளுக்கு ரூ.19,06,000/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.**



சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கே.புதுக்குளம் வருவாய் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா.இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கே.புதுக்குளம் வருவாய் கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 148 பயனாளிகளுக்கு ரூ.19,06,000/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வருவாய்த்துறை மூலம் 9 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,000/- வீதம் ரூ.9,000/- மதிப்பில் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 1 பயனாளிக்கு ரூ.8,000/- மதிப்பில் திருமண உதவித் தொகைக்கான ஆணையையும், 3 பயனாளிகளுக்கு ரூ.3,000/- வீதம் ரூ.9,000/- மதிப்பில் வீட்டுமனை ஒப்படைப்பு ஆணைகளையும், 72 பயனாளிகளுக்கு உழவர் அட்டை, குடும்ப அட்டையில் பெயர் திருத்தல், சேர்த்தல், நத்தம் பட்டா மாறுதல், வாரிசுச் சான்றிதழ், மின்னணு குடும்ப அட்டைகள் என 72 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 85 பயனாளிகளுக்கு வருவாய்த்துறை சார்பிலும், மகளிர் திட்டத்தின் சார்பில் 6 பயனாளிகளுக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தொழில் செய்வதற்கு உதவித் தொகைக்கான (ஆடு மாடு வளர்ப்பு) ரூ.30,000/-க்கான காசோலைகளையும், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் 4 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பதற்காக ரூ.21,000/-க்கான காசோலைகளையும், 6 மகளிர் சுயஉதவி குழுவிற்கு வங்கியின் மூலம் நேரடி தொழில் தொடங்குவதற்கு ரூ.6 லட்சம் மதிப்பிலான ஆணைகளையும், சமூகநலத் துறையின் சார்பில் தாலிக்கு தங்கம் 10 பயனாளிகளுக்கு 80 கிராம் தங்கம் ரூ.2 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலும், திருமண உதவித் தொகை ரூ.3 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலும், மாண்புமிகு முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.5 லட்சம் மதிப்பில் வைப்பு நிதி

பத்திரங்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறையின் சார்பில் தலா 3,500/- வீதம் 10 பயனாளிகளுக்கு ரூ.35,000/- மதிப்பில் தையல் இயந்திரங்களையும், 7 பயனாளிகளுக்கு தலா ரூ.5,000/- மதிப்பில் ரூ.35,000/- மதிப்பில் தேய்ப்பு பெட்டிகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு குதிரைவாலி விதைகளையும், 1 பயனாளிக்கு விளக்கு பொறியையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.2,000/- வீதம் தார்பாய் விரிப்புகள், கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு தாது உப்பு கலவைகள் ஆக மொத்தம் 148 பயனாளிகளுக்கு ரூ.19,06,000/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையுரையில் தெரிவித்ததாவது,

இந்த மக்கள் தொடர்பு முகாமில் அரசு துறை அலுவலர்கள் தங்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள். பொதுமக்களாகிய நீங்கள் திட்டங்களை புரிந்து சரியான முறையில் விண்ணப்பம் செய்து அரசின் நலத்திட்ட உதவிகளை பெறவேண்டும் எனவும், மேலும், கிராமத்திற்கு சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களின் பிரச்சனைகளை களைவதே இந்த முகாமின் முக்கிய நோக்கமாகும். துறை சார்ந்த அலுவலர்கள் இனிவரும் காலங்களில் மக்கள் தொடர்பு முகாம் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்திற்கு நேரடியாகச் சென்று மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகளை அறிந்து அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

மகளிர் திட்டம் சார்பில் நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்களை பயன்படுத்தி படித்து வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி இளைஞர்கள் பயன்பெற வேண்டும் எனவும், டெங்கு காய்ச்சல் நல்லதண்ணீரில்தான் உருவாகிறது. பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறங்களில் நல்லதண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளுமாறும், குப்பைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனியாகப் பிரித்து வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, மானாமதுரை வட்டாட்சியர் திரு.சுந்தரராஜன், தனித் துணை ஆட்சியர்

திரு.பாலகிருஷ்ணன் மற்றும் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள், வருவாய்த்துறை பணியாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.